# <u>பட்டுக்கோட்டை நகராட்சி</u>

**ஸ்ரீ பிலவ வருடம் புரட்டாசி மாதம் 14–ம் தேதி திருவள்ளுவராண்டு 2052 (2021–ம் ஆண்டு செப்டம்பர் 30–ம் தேதி) வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை .. திரு. அ. வீரமுத்துக்குமார், பி.டெக்.,**
**தனி அலுவலர்/ ஆணையர்**

<u>பொருள் எண்..1</u>

பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசுக்கள் உருவாகி அதனால் பொது மக்களுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு (DBC) பணிகள் மேற்கொள்ள துப்புரவு கோட்டம் 1,2,3க்கும் சேர்த்து 60 நபர்கள் பணியமர்த்தி களப்பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்..69, நாள்.. 31.05.2021ன்படி அனுமதி வழங்கப்பட்டதன் உரிமக்காலம் 30.6.2021 உடன் முடிவடைவதன் பொருட்டு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..101, நாள்.. 30.06.2021ன்படி உரிமத்தினை 01.07.2021 முதல் 30.09.2021 வரை 3 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டது. இதன் உரிமக்காலம் 30.09.2021உடன் முடிவடைய உள்ளதால், டெங்கு தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி இப்பணிக்கான உரிமத்தினை 01.10.2021 முதல் 31.012.2021 முடிய 3 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்திடவும், மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் விலைவிகிதப்படி ஊதியம் வழங்கவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.21.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், இப்பணிகளை மகளிர் சுய உதவிக்குழுக்கான கோட்டம்–1க்கு சமத்துவ மகளிர் சுய உதவிக்குழு, ஆனைவிழுந்தான் குளத் தெரு, பட்டுக்கோட்டை கோட்டம்–2–க்கு அதிர்ஷ்ட லெட்சுமி மகளிர் சுய உதவிக்குழு, வெண்டாக்கோட்டை ரோடு, வளவன்புரம், பட்டுக்கோட்டை கோட்டம்–3–க்கு அம்மன் சுய உதவிக்குழு, கோட்டை அல்லா கோவில் தெரு, பட்டுக்கோட்டை மூலம் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1) மேற்படி செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். |
| | 2) டெங்கு தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்..4032/2019/எச்1) |

**தீர்மானம் எண்..204 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

<u>பொருள் எண்..2</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு சம்மந்தமான பதிவுகளானது புதிய இணையதளம் வழியாக கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுவரும் பணிக்கு நகர்மன்றம் தீர்மான எண்..36, நாள்.. 30.03.2017 நகர்மன்ற அனுமதி வழங்கிய உரிம காலம் 28.02.2018 உடன் முடிவடைவதால், இப்பணியை மேலும் ஓராண்டிற்கு மேற்கொள்ளும் பொருட்டு நகர் மன்ற தீர்மான எண்..369, நாள்..28.3.2018 வரை அனுமதி வழங்கிய உரிமக் காலம் 31.3.2019 உடன் முடிவடைவதால், இப்பணியினை மேலும் ஓராண்டிற்கு மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற தீர்மானஎண்.. 60 நாள்.. 31.05.2019ன்படி அனுமதி வழங்கிய உரிமக்காலம் 31.03.2020 உடன் முடிவடைவதால், மேலும் நீட்டிப்பு செய்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..432, நாள்.. 30.03.2020 மற்றும் நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..478/ 30.6.2020, 528/31.8.2020, 554/29.10.2020, 577/31.12.2020 மற்றும் நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..65, நாள்.. 31.05.2021–ன்படி மேற்படி பணிக்கான உரிமக் காலங்களை 30.6.2021 வரை நீட்டிப்பு செய்து

அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..97, நாள்..30.06.2021ன்படி உரிமக்காலத்தினை மேலும் மூன்று மாதங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டதன் உரிமக்காலம் 30.09.2021 உடன் முடிவடைய உள்ளதால், அன்றாட திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியின் அத்தியாவசியம் கருதி உரிமக்காலத்தினை 01.10.2021 முதல் 31.12.2021 வரை உரிமம் நீட்டிப்பு செய்திடவும், அதற்கான உத்தேசசெலவினம் ரூ.0.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) மாவட்டஆட்சித்தலைவர் அவர்களது தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இப்பணிக்கான உரிம காலம் 30.06.2021 உடன் நிறைவடைவதால் 01.10.2021 முதல் 31.12.2021 வரை 3 மாத காலத்திற்கு ஒப்பந்த உரிம காலத்தினை நீட்டிப்பு செய்திடவும், இப்பணிக்கான தினக்கூலி ஊதியத்தினை 2020–2021–க்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தின்படி வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 3) அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.0.80இலட்சம் பொது நிதி மூலம் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். |
| | 4) மேற்படி பணியின் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.. 839/16/எச்1) |

**தீர்மானம் எண்..205 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..3**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் JCB மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு 2 ஓட்டுநர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது தரப்படுத்தப்பட்ட ஊதிய விகித அடிப்படையில் விவேகானந்தா தொண்டு நிறுவனம், பட்டுக்கோட்டை அவர்கள் மூலம் பெற்று ஓட்டுநர் பணிபுரிந்திட நகர்மன்றம் தீர்மான எண்..122, நாள்.. 10.06.2016ன்படி மேலும் ஓராண்டிற்கு உரிம காலத்தினை நீட்டிப்பு செய்திட புதுப்பித்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உரிமத்தினை ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்து நகர்மன்றம் தீர்மான எண்..144, நாள்.. 19.06.2017ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிமக்காலம் 31.05.2018 உடன் முடிவடைவதால், இப்பணிக்கான உரிமக் காலங்களை நகர்மன்றம் தீர்மான எண்..74, நாள்.. 31.05.2019 , .431/30.3.2020, 480/30.6.2020, 530/31.8.2020, 555/29.10.2020, 575/31.12.2020, 66/31.5.2021 மற்றும் நகர்மன்ற தீர்மான எண்..98, நாள்.. 30.06.2021ன்படி நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் உரிமக்காலம் 30.09.2021 உடன் முடிவடைவதால் இப்பணிக்கான உரிமத்தினை 01.10.2021 முதல் 31.12.2021 வரை 3 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்திடவும், அதற்கான உத்தேசசெலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) மாவட்டஆட்சித்தலைவர் அவர்களது தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இப்பணிக்கான உரிம காலம் 30.09.2021 உடன் நிறைவடைவதால் 01.10.2021 முதல் 31.12.2021 வரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த உரிம காலத்தினை நீட்டிப்பு செய்திடவும், இப்பணிக்கான தினக்கூலி ஊதியத்தினை 2020–2021–க்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தின்படி வழங்கிடவும், அன்றாட திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியினை அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| | 3) அதற்காகும் உத்தேச செலவினத் தொகையினை பொது நிதி மூலம் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். (ந.க.எண்..6517/2014/எச்1) |

**தீர்மானம் எண்..206 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

<u>பொருள் எண்..4</u>

அரசாணை எண்.. 166, நாள்.. 23.11.2016–ன்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் 14 எண்ணிக்கை மற்றும் 4 எண்ணிக்கை அரசு பள்ளிகளில் உள்ள கழிவறைகள், வளாகங்களில் தினசரி தூய்மைப் பணி மேற்கொள்வதற்கு தனியார் சுய உதவிக் குழுவான பனிமலர் குழு மூலம் 20 நபர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது தினக்கூலி அடிப்படையில் நகர் மன்றம் தனது தீர்மான எண்..61, நாள்.. 30.3.17ன்படியும் நகர்மன்ற தீர்மான எண்..370, நாள்.. 28.3.2018ன்படியும் அனுமதி வழங்கிய உரிம காலம் 31.3.19 உடன் முடிவடைந்த நிலையில் நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..62, நாள்.. 31.05.19ன்படி 31.03.2020 முடிய அனுமதி காலம் முடிவடைந்ததாலும், மேலும் 28.03.2020 முதல் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக அரசு உத்திரவு மூலம் பள்ளிகள் மூடப்பட்டது. தற்பொழுது 10 மற்றும் 12ம் வகுப்பு உள்ள பள்ளிகள் மட்டும் நடைபெறும் என அரசால் உத்தரவிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், இந்நகராட்சி பகுதியில் உள்ள 3 அரசு மேல்நிலை பள்ளிகளில் மட்டும் தூய்மைப்பணி மற்றும் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதால், ஏற்கனவே பணி செய்து வந்த பனிமலர் சுய உதவிக்குழு மூலம் 5 நபர்களை 3 பள்ளிகளுக்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.. 18, நாள்.. 29.01.2021ன்படி 19.01.2021 முதல் 31.03.2021 முடிய மூன்று மாதங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஊதிய விகிதத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொண்டதற்கான உரிமக்காலம் நிறைவடைந்ததன் பொருட்டு, மேலும் 01.04.2021 முதல் 30.06.2021 முடிய 3 மாதங்களுக்கு உரிமத்தினை நீட்டிப்பு செய்து நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..68, நாள்.. 31.05.2021–ன்படி அனுமதி வழங்கியதன் உரிமக்காலம் 30.6.2021உடன் முடிவடைவதன் பொருட்டு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..96, நாள்..30.06.2021ன்படி உரிமக்காலத்தினை மேலும் மூன்று மாதங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டதன் உரிமம் 30.09.2021 உடன் முடிவடைய உள்ளதால், அன்றாட திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியின் அத்தியாவசியம் கருதி உரிமக்காலத்தினை 01.10.2021 முதல் 31.12.2021 வரை உரிமம் நீட்டிப்பு செய்திடவும், அதற்கான உத்தேசசெலவினம் ரூ.1.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதி வழங்கலாம். செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
|---|---|
| | 2)அன்றாட சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்..8792/2016/எச்1) |

**தீர்மானம் எண்..207 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

<u>பொருள் எண்.. 5</u>

நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..15, நாள்.. 29.1.2016ன்படி இந்நகர எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் 20 வார்டுகளில் மட்டும் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் அன்றாட தூய்மைப்பணி மேற்கொள்வதற்கு தனியார் சுய உதவிக்குழுக்களான பாரதம் சுய உதவிக்குழு, சமுத்திரம் சுய உதவிக்குழு, டாக்டர் அம்பேத்கார் சுய உதவிக்குழு, தூய்மை இந்தியா சுய உதவிக்குழு மற்றும் சுதந்திரம் சுய உதவிக்குழு ஆகிய ஐந்து குழுக்களின் உறுப்பினர்கள் கொண்டு தூய்மைப் பணி மேற்கொண்டதன் உரிம காலம் 31.1.2017 உடன் முடிவடைந்ததன் பொருட்டு நகர் மன்றம் தீர்மானம் எண்..9, நாள்..31.1.2017ன்படி மேலும் ஓராண்டிற்கு உரிமம் நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிம காலம் 31.1.2018 உடன் முடிவடைந்ததாலும், மேற்படி 5 சுய உதவிக்குழுக்கள் தங்களது உரிம காலத்தை அதே ஊதிய விகிதத்தின்படி மேலும் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க கடிதத்தின் வழியே தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது தூய்மை இந்தியா திட்ட பணிகள் நகரின் விரிவாக்க பணிகள், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் போன்றவற்றிற்காக பணியாளர்களின் தேவை நிமித்தம் காரணமாக இரண்டு மாதத்திற்கு மட்டும் தற்காலிகமாக மேற்படி தனியார் சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்ள நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..322, நாள்..31.1.18ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதேபோன்று நகர்மன்ற தீர்மானம் எண்..430/29.5.2018, 502/20.9.2018, 560/30.11.2018, 73/31.5.2019, 312/13.11.2019, 419/25.2.2020, 443/30.4.2020, 479/30.6.2020, 529/31.8.2020, 557/29.10.2020, 574/31.12.2020 மற்றும் நகர்மன்ற தீர்மான எண்..67, நாள்.. 31.05.2020ல் உரிமக் காலத்தினை 01.04.2021 முதல் 30.06.2021 வரை நீட்டிப்பு செய்து அனுமதிக்கப்பட்டதன் உரிமக் காலம் 30.6.2021உடன் முடிவடைவதன் பொருட்டு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..95, நாள்..30.06.2021ன்படி உரிமக்காலத்தினை மேலும் மூன்று மாதங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதன் உரிமக்காலம் 30.09.2021 உடன் முடிவடைய உள்ளதால், அன்றாட திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியின் அத்தியாவசியம் கருதி உரிமக்காலத்தினை 01.10.2021 முதல் 31.12.2021 வரை 3 மாதத்திற்கு உரிமம் நீட்டிப்பு செய்திடவும், அதற்கான உத்தேசசெலவினம் ரூ.45.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) தனியார் சுய உதவிக்குழுக்களின் உரிம காலம் முடிவடைந்ததன் பொருட்டும், பொது சுகாதாரத்தின் அத்தியாவசியம் கருதி மேலும் 01.10.2021 முதல் 31.12.2021 வரை 3 மாதங்களுக்கு உரிமத்தினை நீட்டிப்பு செய்திடவும், 2020–2021–க்கான மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது தினக்கூலி அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தின்படி வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3) உத்தேச செலவு தொகை ரூ.45.00 லட்சத்திற்கு பொது நிதி மூலம் பணி மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். |
| | 4) திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.7150/2015/எச்1) |

**தீர்மானம் எண்..208 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்.. 6</u>**

இந்திய அரசின் DAY-NULM திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதன்படி பட்டுக்கோட்டை நகராட்சியில் பதிவு பெற்ற சாலையோர வியாபாரிகள் 158 நபர்கள் உள்ளனர். மேற்கண்ட சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்..20789/2021/UPA1, நாள்.. 20.09.2021–ல் 3 வகையான வியாபாரம் செய்யும் 1) காய்கறிகள் மற்றும் பழங்கள் 2) உணவுப் பொருள்கள் 3) பூக்கள் மற்றும் பூஜை பொருள்கள் விற்பனை செய்யும் வண்டிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை (Detailed Implementation Plan) DIP தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பேரில், பட்டுக்கோட்டை நகராட்சியில் பதிவு பெற்ற சாலையோர வியாபாரிகள் 158 நபர்களில் முதல் கட்டமாக பழங்கள் மற்றும் காய்கறிகள் விற்பனை செய்யும் வண்டி 40 நபர்களுக்கும், உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் வண்டி 9 நபர்களுக்கும், பூக்கள் மற்றும் பூஜை பொருள்கள் விற்பனை செய்யும் வண்டி 17 நபர்களுக்கும் ஆக மொத்தம் 66 நபர்களுக்கு உரிய வண்டிகளுக்கான செலவினம் ரூ.51,42,000/– (ரூபாய் ஐம்பத்து ஒரு லட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் மட்டும்) திட்ட மதிப்பீடு தயார் செய்து, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்கலாம்.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..7737/2015/எப்1) |

**தீர்மானம் எண்..209 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்.. 7</u>**

இந்நகராட்சி எல்லைக்கு உட்பட்ட வார்டு எண்.29 நாடியம்மன் கோவில் எதிரில் உயர்மின்கோபுர விளக்கு பழுது பார்க்கும்பணிக்கு 21.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்கு உட்பட்ட வார்டு எண்.29 நாடியம்மன் கோவில் எதிரில் உயர்மின்கோபுர விளக்கு பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளுதல் | ரூ.1,00,000– | பகவதி ஏஜென்சிஸ் இண்டியா பிரைவெட் லிமிடெட் மன்னார்குடி | 0.24% குறைவு |
| | | | காவியா எண்டர் பிரைசஸ், மன்னார்குடி | 9.52 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை பகவதி ஏஜென்சிஸ் இண்டியா பிரைவெட் லிமிடெட், மன்னார்குடி அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது காவியா எண்டர் பிரைசஸ், மன்னார்குடி,அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே பகவதி ஏஜென்சிஸ் இண்டியா பிரைவெட் லிமிடெட் மன்னார்குடி அவர்களது ஒப்பந்தப் புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1).வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள பகவதி ஏஜென்சிஸ் இண்டியா பிரைவெட் லிமிடெட் மன்னார்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2).மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2928 /2021 /இ2)** |

**தீர்மானம் எண்..210 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்.. 8**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15போஸ்டாபீஸ் ரோடு எதிரில் உயர்மின்கோபுர விளக்கு பழுது பார்க்கும் பணிக்கு 21.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்கு உட்பட்ட வார்டு எண்.15 போஸ்டாபீஸ் ரோடு எதிரில் உயர்மின்கோபுர விளக்கு பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளுதல் | ரூ.2,54,000– | பகவதி ஏஜேன்சிஸ் இண்டியா பிரைவெட் லிமிடெட் மன்னார்குடி | 0.37% குறைவு |
| | | | காவியா எண்டர் பிரைசஸ், மன்னார்குடி. | 2.14 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை பகவதி ஏஜேன்சிஸ் இண்டியா பிரைவெட் லிமிடெட், மன்னார்குடி அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது காவியா எண்டர் பிரைசஸ், மன்னார்குடி,அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே பகவதி ஏஜேன்சிஸ் இண்டியா பிரைவெட் லிமிடெட் மன்னார்குடி அவர்களது ஒப்பந்தப் புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1).வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள பகவதி ஏஜேன்சிஸ் இண்டியா பிரைவெட் லிமிடெட் மன்னார்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2).மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3047 /2021 /இ2) |

**தீர்மானம் எண்..211 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்.. 9**

வார்டு எண்..31 லெட்சத்தோப்பு ஹவுசிங் யூனிட் பகுதியில் உள்ள 5 லட்சம் லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் குடிநீர் வெளியேற்றும் 200mm அளவுள்ள வால்வு பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு 27.09.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்..31 லெட்சத்தோப்பு ஹவுசிங் யூனிட் பகுதியில் உள்ள 5 லட்சம் லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் குடிநீர் வெளியேற்றும் 200mm அளவுள்ள வால்வு பழுதுநீக்கம் செய்யும் பணி | ரூ.21,000/– | கே.எடிசன் பட்டுக்கோட்டை | 20,850/– |
| | | | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 21,500/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே,எடிசன் ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்விலைப்புள்ளியானது திரு.எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியை விட குறைவாக உள்ளது. ஆகவே திரு.கே.எடிசன், ஒப்பந்ததாரர் அவர்களது விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1).வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே,எடிசன் ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்களது விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மற்றும் மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 3482/2021 /இ2) |

**தீர்மானம் எண்..212 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்.. 10</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் மழைநீர் வடிகால் குழாய் அமைக்கும் பணிக்கு 21.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் மழைநீர் வடிகால் குழாய் அமைக்கும் பணிக்கு | ரூ.1,80,000– | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 0.02 % குறைவு |
| | | | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 4.94 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை கே.எடிசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்வொப்பந்புள்ளியானது எஸ்.கணேசன்,ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே கே.எடிசன், ஒப்பந்ததாரர் பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.கே.எடிசன்,ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3153 /2021 /இ1) |

**தீர்மானம் எண்..213 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்.. 11</u>**

இந்நகராட்சி அலுவலகத்திற்கு பின்னால் இயங்கி வந்த பழைய ஆரம்ப சுகாதார மைய கட்டிடத்தினை பழுது பார்த்தல் பணிக்கு 21.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி அலுவலகத்திற்கு பின்னால் இயங்கி வந்த பழைய ஆரம்ப சுகாதார மைய கட்டிடத்தினை பழுது பார்த்தல் | ரூ.3,25,000– | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.07 % குறைவு |
| | | | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 5.93 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது கே.எடிசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 2930/2021 /இ1) |

**தீர்மானம் எண்..214 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

ஒம்/அ. வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்/ ஆணையர்
பட்டுக்கோட்டை நகராட்சி.

**/உண்மை நகல்/**

ஆணையர்
பட்டுக்கோட்டை நகராட்சி.

**30.09.2021ம் தேதியன்று பட்டுக்கோட்டை நகர்மன்றத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் 209—ம் எண்ணிட்ட தீர்மானத்தின் நகல்**

**--**

**<u>பொருள் எண்.. 6</u>**

இந்திய அரசின் DAY-NULM திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதன்படி பட்டுக்கோட்டை நகராட்சியில் பதிவு பெற்ற சாலையோர வியாபாரிகள் 158 நபர்கள் உள்ளனர். மேற்கண்ட சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்..20789/2021/UPA1, நாள்.. 20.09.2021—ல் 3 வகையான வியாபாரம் செய்யும் 1) காய்கறிகள் மற்றும் பழங்கள் 2) உணவுப் பொருள்கள் 3) பூக்கள் மற்றும் பூஜை பொருள்கள் விற்பனை செய்யும் வண்டிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை (Detailed Implementation Plan) DIP தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பேரில், பட்டுக்கோட்டை நகராட்சியில் பதிவு பெற்ற சாலையோர வியாபாரிகள் 158 நபர்களில் முதல் கட்டமாக பழங்கள் மற்றும் காய்கறிகள் விற்பனை செய்யும் வண்டி 40 நபர்களுக்கும், உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் வண்டி 9 நபர்களுக்கும், பூக்கள் மற்றும் பூஜை பொருள்கள் விற்பனை செய்யும் வண்டி 17 நபர்களுக்கும் ஆக மொத்தம் 66 நபர்களுக்கு உரிய வண்டிகளுக்கான செலவினம் ரூ.51,42,000/— (ரூபாய் ஐம்பத்து ஒரு லட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் மட்டும்) திட்ட மதிப்பீடு தயார் செய்து, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்கலாம்.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..7737/2015/எப்1) |

**நகர்மன்ற தீர்மான எண்..209** **நாள்.. 30. 09. 2021.**

**.. அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

ஒம்/அ. வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்/ஆணையர்
பட்டுக்கோட்டை நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்
பட்டுக்கோட்டை நகராட்சி

# பட்டுக்கோட்டை நகராட்சி

**ஸ்ரீ பிலவ வருடம் புரட்டாசி மாதம் 5–ம் தேதி திருவள்ளுவராண்டு 2052 (2021–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21–ம் தேதி) செவ்வாய் கிழமை மாலை 5.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. எல்.குமார், பி.இ.,**
**தனி அலுவலர்/ நகராட்சி பொறியாளர்**
**மற்றும் ஆணையர் (கூ.பொ)**

**பொருள் எண்.. 1**

பட்டுக்கோட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் T.N.49BX-1320 காம்பாக்டர் வாகனத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 21.09.2021–ம் தேதியன்று கீழ்க்கண்டவாறு 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தார் பெயர் | ஒப்பந்தப்புள்ளி ரூ. |
|---|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் T.N.49BX-1320 காம்பாக்டர் வாகனத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 50,000/– | அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், 13, ராம்கே ரோடு, திருவாரூர். | ரூ.49,796- |
| | | | குரு ஆட்டோ கேரேஜ், ஏண்..1, நாகை ரோடு, தஞ்சாவூர். | ரூ.51,920- |
| | | | சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ், மயிலாடுதுறை மெயின் ரோடு, கும்பகோணம். | ரூ.53,100/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற 3 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வரிசை எண்..1–ல் காணும் அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், 13, ராம்கே ரோடு, திருவாரூர் .நிறுவனம் அளித்துள்ளது. இவ்வொப்பந்தப் புள்ளியானது வரிசை எண்..2 மற்றும் 3ல் காணும் நிறுவனங்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியைவிட குறைவாக உள்ளது. எனவே, அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், 13, ராம்கே ரோடு, திருவாரூர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1)வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| | 2) திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.. 3331 /2021/எச்1) |

**தீர்மானம் எண்..202 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்.. 2</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் T.N.49BX-0437 காம்பாக்டர் வாகனத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 21.09.2021–ம் தேதியன்று கீழ்க்கண்டவாறு 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தார் பெயர் | ஒப்பந்தப்புள்ளி ரூ. |
|---|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் T.N.49BX-0437 காம்பாக்டர் வாகனத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 66,000/– | அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், 13, ராம்கே ரோடு, திருவாரூர். | ரூ.65,136- |
| | | | குரு ஆட்டோ கேரேஜ், ஏண்..1, நாகை ரோடு, தஞ்சாவூர். | ரூ.66,670- |
| | | | சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ், மயிலாடுதுறை மெயின் ரோடு, கும்பகோணம். | ரூ.69,620- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற 3 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வரிசை எண்..1—ல் காணும் அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், 13, ராம்கே ரோடு, திருவாரூர் நிறுவனம் அளித்துள்ளது. இவ்வொப்பந்தப்புள்ளியானது வரிசை எண்..2 மற்றும் 3ல் காணும் நிறுவனங்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியைவிட குறைவாக உள்ளது. எனவே, அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், 13, ராம்கே ரோடு, திருவாரூர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1)வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| | 2) திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி உத்தேச செலவினம் ரூ.66,000/—க்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.. 3320 /2021/எச்1) |

**தீர்மானம் எண்..203 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

ஒம்/எல்.குமார்
தனி அலுவலர்/ ஆணையாளர் (கூ.பொ)
பட்டுக்கோட்டை நகராட்சி.

**/உண்மை நகல்/**

ஆணையாளர் (கூ.பொ)
பட்டுக்கோட்டை நகராட்சி.

<u>பட்டுக்கோட்டை நகராட்சி</u>

**ஸ்ரீ பிலவ வருடம் புரட்டாசி மாதம் 5—ம் தேதி திருவள்ளுவராண்டு 2052 (2021—ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21—ம் தேதி) செவ்வாய் கிழமை மதியம் 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. எல்.குமார், பி.இ.,**
**தனி அலுவலர்/ நகராட்சி பொறியாளர்**
**மற்றும் ஆணையர் (கூ.பொ)**

<u>பொருள் எண்..1</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27 கணபதி நகர் வார்டு எண்.31 லெட்சத்தோப்பு வார்டு எண்.1 நரியம்பாளையம் ஆகிய இடங்களில் வசிக்கும் பொது மக்கள் குடிநீர் வசதி இல்லை என கோரிக்கை வைத்ததின் பெயரிலும் முதலமைச்சர் தனிப்பிரிவு மனுவின் அடிப்படையில் இடம் ஆய்வு செய்யப்பட்டது. (UTM No.1272300/2021/CM Cell Petition Date: 18.07.2021 இதனடிப்படையில் குடிநீர் குழாய் (பகிர்மான குழாய் அமைத்தல்) அமைத்தால் வீட்டு குடிநீர் இணைப்பு பெறும் வாய்ப்பு ஏற்பட்டு நகராட்சி வருவாய் கூடுதலாகும் நிலையும் ஏற்படும் என்பதால் குடிநீர் குழாய் அமைக்க உத்தேச மதிப்பீட்டு ரூ.2.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி குடிநீர் நிதியிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.. 4883 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..189 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..2**

பட்டுக்கோட்டை நகராட்சி நைனாங்குளத்திலுள்ள கம்போஸ்ட்யார்டில் உள்ள MCC–யில் இருக்கும் காய்கறி மார்கெட்டில் Bio குப்பைகள் அனைத்தும் தூளாக்கும் இயந்திரம் (Bio-Shredding Machine) தற்போது கன்வேயர் பெல்ட் பழுதாகி இயக்க இயலாத சூழ்நிலையில் உள்ளது.ஆகவே அந்த இயந்திரத்தை இயக்க வேண்டுமாயின் **36.6**feet conveyor belt மாற்ற வேண்டும் அதனை மாற்றம் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.**40720**–க்கு நிர்வாக அனுமதி வழங்கவும் மற்றும் உள்ளுர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு மேலும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.. 3132 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..190 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..3**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.**15** காசான்குளம் தென்கரையில் உள்ள தடுப்புச்சுவர் மற்றும் நடைபாதை சேதமடைந்து பொது மக்கள் நடமாட இயலாத சூழ்நிலையில் உள்ளது. அதனை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமானால் சேதமடைந்த பகுதியினை அப்புறப்படுத்தி அதற்கு பதிலாக பைல் பவுண்டேஷன் அமைத்து தடுப்புச்சுவர் மற்றும் நடைபாதையினை மீள அமைக்க வேண்டும் அதனை தவிர்த்து காலம் தாழ்த்தினால் தென்கரையிலுள்ள சாலை சேதமடையும் அபாயம் ஏற்படும் என்பதால் உடன் தடுப்புச்சுவர் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.**8.50** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.. 3154 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..191 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..4**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நைனாங்குளத்திலுள்ள கம்போஸ்ட் உரக்கிடங்கில் உள்ள Bio-Shredding Machine–க்கு Belt கொள்முதல் செய்ய **06.09.2021** அன்று விலைப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| **1.** | M/S MSG Infra 1/90 Manalur Kudiyana st, Kovilvenni,Needamangalam (Tk) Tiruvarur | 40720 |
| **2.** | Sri Balaji Industries ,622/1 Eigi Industries Area,Trichy Road singanallur Ciombatore | **41500** |
| **3.** | Neelaveni Cattage Industries,NGR Puram.Ondiputhur Road Irugur, Coimbatore | **45000** |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகளில் வரிசை எண்.**1**–ல் காணும் நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியானது. மற்ற இரண்டு நிறுவனங்களின் விலை விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே M/S MSG Infra,Tiruvarur நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள M/SMSGInfra,Tiruvarur நிறுவனத்தின் விலைப் புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.. 3132 /2021/இ1) |

**தீர்மானம் எண்..192 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..5</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள டாக்ஸி ஸ்டாண்ட் இருக்கும் இடத்தில் மழைநீர் வடிகால் மிகவும் மோசமான நிலையில் உள்ளது பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதுடன் மழைநீர் வெளியேறாமல் டாக்ஸி ஸ்டாண்ட் இருக்கும் இடத்தில் மழைநீர் தேங்கி நின்று பெரிதும் அவதிபடுவதாக புகார் வந்த வண்ணம் உள்ளது. அதுகுறித்து இடம் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் மழைநீர்தேங்கி நிற்பதை தடுத்து நிறுத்த இயலும் என்பதால் டாக்ஸி ஸ்டாண்ட் பகுதியில் மழைநீர் வடிகால் புதிதாக அமைக்க உத்தேச செலவின மதிப்பீடு ரூ.8.75 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும். இப்பணிக்கான செலவினத் தொகையை 15–வது நிதிக்குழு மான்யம் இரண்டாவது தவணையின் கீழ்பெறப்பட்ட மான்யத்தின் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.. 3152/ 2021 /இ1) |

**தீர்மானம் எண்..193 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..6**

பட்டுக்கோட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கட்டப்பட்டுள்ள MCC சென்டரில் உள்ள Bio-Shredding Machine–ல் உள்ள பேரிங் பல்சக்கரம் மற்றும் இதர உதிரி சாமான்கள் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.இந்த உபகரணங்களிலுள்ள உதிரிபாகங்களை மாற்றம் செய்தால் தான் இதனை தொடர்ந்து இயந்திரத்தை இயக்க முடியும் என்ற சூழ்நிலையில் உள்ளதால் Bio-Shredding Machine –ஐ பழுது நீக்கம் செய்ய உத்தேச செலவினம் ரூ.72295/–க்கு நிர்வாக அனுமதி வழங்கவும் மற்றும் உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு மேலும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3151 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..194 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..7**

பட்டுக்கோட்டை நகராட்சியில் 2020–21–ஆம் ஆண்டில் நடைபெற்று வரும் பணிகளின் விபரம் தினகரன் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக்கட்டணம் ரூ.36,750/–ஐ பொது நிதியிலிருந்து KAL PUBLICATIONS PVT LTD என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண் .3256 /2021/இ1) |

**தீர்மானம் எண்..195 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..8**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள MCC சென்டரில் உள்ள Bio-Shredding Machine–ல் உள்ள பேரிங்,பல்சக்கரம் மற்றும் இதர உதிரி பாகங்கள் கொள்முதல் செய்ய 06.09.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | Linga Agri Trading & Machinery Pvt ltd,46,KPN Colony,1 st Street. Tirupur-641601 | 72295- |
| 2. | Sri Balaji Industries ,622/1 Eigi Industries Area,Trichy Road singanallur Ciombatore | 77000– |
| 3. | Neelaveni Cattage Industries,NGR Puram.Ondiputhur Road Irugur, Coimbatore | 104666– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் காணும் நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியானது. மற்ற இரண்டு நிறுவனங்களின் விலை விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே Linga Agri Trading & Machinery Pvt நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 18அலுவலக குறிப்பு | வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள Linga Agri Trading & Machinery Pvt Ltd.,Tiruppur, நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |

| | (ந.க.எண். 3151 /2021/இ1) |
|---|---|

**தீர்மானம் எண்..196 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..9**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20028/2021/தி2–2 நாள் 08.09.2021–ம் தேதிய கடிதத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021–22–ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் பொது மக்களின்நலனுக்காகவும் குறிப்பாக சிறுவர்களுக்காகவும் பூங்காக்களை மேம்பாடு செய்ய ரூ.122 கோடி மதிப்பீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது கீழ்கண்ட பூங்காக்கள்முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ள பூங்காகள் மேம்பாட்டிற்கான மதிப்பீடுரூ.270 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை மான்யமாக வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துருவினை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | புல எண் | பூங்காவின் பரப்பளவு ச.மீ | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 19 | V.O.C நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | A/33/158/1P | 694.89 | 26.00 |
| 2 | 30 | பரசுராமன் நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | C/10/11/7P | 1797.00 | 50.00 |
| 3 | 11 | N.K கார்டன் பூங்கா மேம்பாடு செய்தல் | B/33/29/P | 917.6 | 44.00 |
| 4 | 23 | லெட்சுமி நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | C/10/9/5P | 1626.39 | 50.00 |
| 5 | 27 | ஆயிஷா பவுண்டேஷன் நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | D/35/199/4P | 3661.00 | 50.00 |
| 6 | 31 | ஜானகிராமன் நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | C/25/6/14.. | 1838.66 | 50.00 |
| | | | | **ஆக கூடுதல் ரூ.** | **270.00** |

| அலுவலக குறிப்பு | 1).மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2).நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின்படி அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் பொது மக்களின்நலனுக்காகவும் குறிப்பாக சிறுவர்களுக்காகவும் பூங்காக்களை மேம்பாடு செய்வதற்கான தொகையை மான்யமாக 2021–22– ன் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கிடகோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.. 3161 / 2021 /இ1) |
|---|---|

**தீர்மானம் எண்..197 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..10**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14006/2021/தி2–2 நாள் 08.09.2021–ம் தேதிய கடிதத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021–22ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் உள்ள தகன மேடையை நவீன தகன மேடையாக

மாற்றம் செய்ய ரூ.112.50 கோடி மதிப்பீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்நகராட்சியில் தஞ்சாவூர் சாலையிலுள்ள தகன மேடையை நவீன தகன மேடையாக மேம்பாடு செய்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடுரூ.150.00இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை மான்யமாக வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துருவினை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1).மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2).நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின்படி தஞ்சாவூர் சாலையிலுள்ள தகனமேடையை நவீன தகன மேடையாக மாற்றுவதற்கான தொகையை மான்யமாக 2021–22–ன் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3043 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..198 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..11</u>**

பட்டுக்கோட்டை நகராட்சியில் 2020–21–ஆம் ஆண்டில் நடைபெற்று வரும் பணிகளின் விபரம் தொழில் மலரில் மாலை மலர் என்ற நிறுவனம் மூலம் பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக்கட்டணம் ரூ.16,000/–ஐ பொது நிதியிலிருந்து MALAR PUBLICATION PRIVATE LTD என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண் .3256 /2021/இ1) |

**தீர்மானம் எண்..199 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..12</u>**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள மின்சாதனங்கள் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளுதல் 13.09.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி களின் சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிஅலுவலகத்தில் உள்ள மின்சாதனங்கள் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளுதல் | ரூ.30,000/– | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.03 % குறைவு |
| | | | பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ், பட்டுக்கோட்டை | 2.73 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்விலைப்புள்ளியானது பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே திரு. எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்களது விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1).வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு –15ன் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 3255/2021 /இ1) |

**தீர்மானம் எண்..200 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..13</u>**

பட்டுக்கோட்டை நகராட்சியில் 2020–21–ஆம் ஆண்டில் நடைபெற்று வரும் பணிகளின் விபரம் தொழில் மலரில் மாலை முரசு என்ற நிறுவனம் மூலம் பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக்கட்டணம் ரூ.12,600/–ஐ பொது நிதியிலிருந்து THANJAI MURASU PRIVATE LTD என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண் .3256 /2021/இ1) |

**தீர்மானம் எண்..201 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

ஒம்/எல்.குமார்
தனி அலுவலர்/ ஆணையாளர் (கூ.பொ)
பட்டுக்கோட்டை நகராட்சி.

**/உண்மை நகல்/**

ஆணையாளர் (கூ.பொ)
பட்டுக்கோட்டை நகராட்சி.